ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வு அமர்வு




# நாணயக் கொள்கை அறிக்கையின் முக்கிய விடயங்கள்

## 2024 ஓகத்து

2024 ஓகத்து 16

*இலங்கை மத்திய வங்கி*

*பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்*

# உள்ளடக்கம்

- இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு
- சுருக்க அறிக்கை
- நாணயக் கொள்கைச் சுருக்கம்

- **பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு**
  - ***அடிப்படை எதிர்வுகூறல்***
  - ***எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள்***
  - ***பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி எறிவுகளுக்கான இடர்நேர்வுகள்***

*நாணயக் கொள்கை அறிக்கையின் முக்கிய நோக்கு*

- தற்போதைய பொருளாதார நிலைமைகள்
  - உள்நாட்டுத் துறை மற்றும் உலக அபிவிருத்திகள்

*இதற்கு மேலதிகமாக,*

*“நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் பணவீக்க இலக்கு” பற்றிய சிறப்புக் குறிப்பு*




# நாணயக் கொள்கைச் சுருக்கம்

## இலங்கை மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களை தொடர்ந்தும் குறைத்துக் கொண்டது...

முக்கிய கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**"இந்த அண்டில 75 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வீதங்களை குறைத்து மத்திய வங்கி தளர்வான நிலைப்பாட்டை பேணுகிறது."**

"இது 2023இல் ஓர் கணிசமான 650 அடிப்படைப் புள்ளிகள் குறைப்பிற்குப் பின்னர் இடம்பெறுகிறது."

| 2024 மார்ச்சு | 2024 மே | 2024 யூலை |
|---|---|---|
| கொள்கை வட்டி வீதங்கள் 50 அடிப்படைப் புள்ளிகளால் 8.50 சதவீதத்திற்கும் (துணைநில் வைப்பு வசதி வீதம்) மற்றும் 9.50 சதவீதத்திற்கும் (துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம்) குறைக்கப்பட்டன | கொள்கை வட்டி வீதங்கள் 8.50 சதவீதம் (துணைநில் வைப்பு வசதி வீதம்) மற்றும் 9.50 சதவீதமாக (துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம்) பேணப்பட்டது | கொள்கை வட்டி வீதங்கள் மேலும் 25 அடிப்படைப் புள்ளிகளால் 8.25 சதவீதத்திற்கும் (துணைநில் வைப்பு வசதி வீதம்) மற்றும் 9.25 சதவீதத்திற்கும் (துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம்) குறைக்கப்பட்டன |




# பணவீக்கத் தோற்றப்பாடு

வலு விலைகளுக்கான கீழ்நோக்கிய திருத்தங்கள் அண்மைய மாதங்களில் முதன்மைப் பணவீக்கத்தைத் தளர்த்துவதற்கு ஆதரவளித்துள்ளன.

## ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

**உணவுப் பணவீக்கத்திலுள்ள மெதுவடைதலும் குறைவடைந்த கேள்வி நிலைமைகளும் இதற்கு பங்களிப்புச் செய்தன**

முதன்மைப் பணவீக்கமானது அண்மைக் காலத்தில் மேலும் மெதுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபடம் 01: எறிவுசெய்யப்பட்ட முதன்மைப் பணவீக்கம்**
**(காலாண்டு ரீதியாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)**
*2024 யூலை மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்*




மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

குறிப்பு: 2024 யூலை மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ள வேளையில், இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் 2024 யூலையில் எதிர்வுகூறல் சுற்றில் அனைத்து கிடைப்பனவாக இருந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

- 2025ஆம் ஆண்டு காலாண்டு வரை பணவீக்கம் இலக்கிற்கு கீழாக காணப்படக்கூடும்.
- 2025ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் தற்காலிகமாக உயர்வடைந்த பணவீக்கம் 5 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு முன்னர் படிப்படியாக உறுதியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# பணவீக்க தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வுகள்...

## மேல்நோக்கிய இடர்நேர்வுகள்

- கூலி உயர்வுகளுக்கான கேள்விகளின் சாத்தியமான அடைவு
- மோசமான வானிலை/காலநிலை நிலைமைகள் வேளாண்மை உற்பத்தியை பாதிக்கும்
- சாத்தியமான ரூபாய் தேய்மானம்
- நிச்சயமற்றத்தன்மைக்கு மத்தியில் உலக உணவு மற்றும் வலு விலைகள் மீதான சாத்தியமான மேல்நோக்கிய அழுத்தங்கள்

## கீழ்நோக்கிய இடர்நேர்வுகள்

- மக்களின் குறைவடைந்த கொள்வனவு சக்தியின் நீடித்த தாக்கம்
- ஏனைய விலைமட்டங்களை விடவும் வலு விலைகளின் எதிர்பார்க்கப்பட்ட கசிவுத் தாக்கங்களின் சாத்தியமான பாரிய குறைப்புக்கள்




# பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாடு

வளர்ச்சி உத்வேகமானது குறுங்காலத்தில் தொடர்ந்து, நடுத்தர காலத்தில் அதன் உள்ளார்ந்த ஆற்றல் மட்டத்தினை நோக்கிப் படிப்படியாக நகருமென எதிர்பார்க்கப்படுகின்றது…

**எறிவுசெய்யப்பட்ட காலாண்டு ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %)**
***2024 யூலை மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்***




குறிப்பு: 2024 யூலை மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை வீச்சு வரைபடத்தில் எறிவுகள் பிரதிபலிக்கின்றன.

**பொருத்தமான கொள்கைகளின் ஆதரவுடன் பொருளாதார வளர்ச்சியில் மீட்சியானது நடுத்தர காலத்தில் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது**

# இடர்நேர்வுகளின் சமநிலை...



## சிறப்புக் குறிப்பு

# நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழான பணவீக்க இலக்கு…

- நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் பரிணாமம்
- நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலின் முறைசார் பின்பற்றுகை
- இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் பணவீக்க இலக்கு

**அனுமான ரீதியிலான இலக்கங்களின் அடிப்படையிலமைந்ததொரு விளக்கப்படம்**




"அடையப்பட்ட காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 5 சதவீத இலக்கிலிருந்து **தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளில்** இலக்கின் மேல்நோக்கிய அல்லது கீழ்நோக்கிய திசையிலிருந்து 2 சதவீத புள்ளிகளுக்கு மேலாக விலகியிருக்குமாயின் இலக்கு மீறுகையொன்று நிகழும்"


MONETARY
POLICY REPORT
AUGUST 2024
ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# நன்றி